15

அன்பழைப்பு

245
61.

O-, SNAN, A
N61
68333

அண்ணா...

அன்பழைப்பு

அறிஞர், அண்ணா

பகுத்தறிவுப் பண்ணை

பெத்துநாயக்கன் தெரு

சென்னை—1.

முதற்பதிப்பு : ஏப்ரல் '61

விலை 25 காசு

பதிப்புரை

நமது, பொதுச் செயலாளர் அறிஞர், அண்ணா அவர்கள் 9—4—61 ஞாயிறு அன்று கடற்கரையில் அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன் தலைமையில், பத்து லட்சம் மக்கள் முன், சொற்பொழிவு ஆற்றினார்கள். அந்தச் சொற்பொழிவின் சுருக்கமே உங்கள் கையில் தவழும் அன்பழைப்பு.

68333

அச்சிட்டோர் :
மதுரம் பிரஸ்,
222, தம்பு செட்டித் தெரு,
சென்னை-1.

அன்பழைப்பு

அன்புள்ள நண்பர்களே!

இங்கு பேசிய எல்லா நண்பர்களும் இனி அடைய இருக்கும் வெற்றியைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். நான் எனக்குக் கிடைத்த தோல்வியைப் பற்றித்தான் குறிப்பிட இருக்கிறேன்! வெற்றியைப் பற்றி எண்ணுவதைவிட என் மனம் தோல்வியைப் பற்றித்தான் எண்ணிடச் செய்கிறது!

"கலவரமும், கசப்பு எண்ணமும், வேற்றுமை உணர்ச்சியும் அறவே கூடாது" என்ற என்னுடைய எண்ணம் சிதைக்கப்பட்டு விட்டது! மறுபடியும் இது நீக்கப்பட வேண்டும், மறுபடியும் பாச உணர்ச்சி எல்லோரிடத்திலும் தவழ வேண்டும்! அதுவரை நான் வெற்றி பெற்றதாக நினைக்கமாட்டேன்! நான் யாரையும் வெளியே போகச் சொல்ல மாட்டேன்; யாரையும் விலகிச் செல்லவும் விட மாட்டேன் என்ற என்னுடைய நல்லெண்ணம் ஈடேறவில்லை! மீண்டும் சொல்லுகிறேன்—உள்ளபடியே என் பொது வாழ்வில் நான், மிகப் பெரிய தோல்வியைத்தான் பெற்று விட்டேன்!

இந்த தோல்விக்கு நிர்வாகத் திறமை, சில குறைபாடுகள் காரணமாக இருக்கலாம்! இல்லை என்று நான் மறுத்துக் கூற விரும்பவில்லை!

ஏற்பட்டுவிட்ட குறைபாடுகளை களையத்தான் வேண்டும்! அந்த குறைபாடுகளை மூன்றுவித முறையால்தான் நீக்க முடியும், நீக்கப்பட வேண்டும்!

ஒன்று—உரிய காலத்தில் சொல்லுதல்!

இரண்டு—ஆற்றலோடு நடத்துதல்!

மூன்று—இதையெல்லாம் செய்ய கால அளவு கொடுத்தல்!

இந்த மூன்று வகையினுல்தான் குறைபாடுகளை களைந் தெறிய முடியும்! மாச்சரிய உணர்ச்சிக் கொள்ளுவதாலோ, மாற்ருரும் பழிக்கும் விதத்தில் பேசுவதாலோ இவைகளை களைந்தெறிய முடியாது! இது போன்ற முறைகளால் ஏற்பட்டுவிட்ட குறைபாடுகளை நிச்சயமாகக் களைந்தெறிவேன்!

சம்பத்தின் ராஜிஞமா என் நிர்வாகத் திறமைக்கு ஏற்பட்ட ஒரு பாடம் என்றே ஏற்றுக்கொள்கிறேன்.

"குறைபாடுகளை களைந்தெறிய ஒரு நாளும் தயங்க மாட்டேன்—அதனுல் கசப்புணர்ச்சியும், மாச்சாரியமும் உண்டாகிவிடக் கூடாது" என்றே விரும்புகிறேன்.

நண்பர் மதியழகன், கனிவாக தூய்மை உள்ளத்தோடு சொன்ஞர்—"பத்திரிகை நிருபர்கள் பரபரப்பான செய்தியை வெளியிட்டே இந்த காரியத்தைச் செய்திருக்கின்றனர்" என்று!

பத்திரிகை நிருபர்கள் வேறு என்ன செய்வார்கள்—பரபரப்பான செய்தியில்தானே அவர்களது வாழ்வே இருக்கிறது.

நல்ல ஓவியன்—அழகு மங்கையின் உருவத்தை நிர்வாணமாகத் தீட்டிக் காட்டுவது—அவனது பிழைப்புக்காகவே தவிர, திறமைக்காக அல்ல! தங்கையின் ஓவியத்தை தாயின் ஓவியத்தை அப்படி ஒருநாளும் நிர்மாணமாகத் தீட்டிக் காட்ட சம்மதிக்க மாட்டான்! அப்படித் தீட்டிக் காட்டினுல் அந்த மங்கையின் மாண்பு கெட்டுவிட்டது என்று பொருள் அல்ல!

நண்பர் கருணாநிதி குறிப்பிட்டார்—பத்திரிகை நிருபர்களுக்கு தாழ்வாரம் வரையில் இடம் கொடுத்ததாக! நானோ என் பக்கத்தில் கூட இடமளிக்கவில்லை! அதனால்தான் என்னைப்பற்றி அதிகமான செய்திகள் வருவதில்லை.

இங்கு பல்லாயிரக் கணக்கில் நீங்கள் கூடியிருக்கிறீர்கள்! இங்கு தி. மு. கழகத்தின் கொள்கையை விளக்கி பல நண்பர்கள் பேசி இருக்கிறார்கள்! பத்திரிகைகளில் இந்த செய்தி வராது! ஆற்றல்மிக்கவர்களே! அன்பு வழியில் நடப்பவர்களே! அருமைத் தாய்மார்களே! உங்களைப்பற்றி இந்தப் பத்திரிகைகள் ஒரு துளியும் கவலைப்படாது இந்தக் கூட்டத்தில்—யாராவது ஒரு பன்றியை விடுவார்களானல்—அதை கொட்டை எழுத்தில், எட்டுக் காலத்தில் போடுவார்கள்!

“அண்ணாதுரை கூட்டத்தில் பன்றி! குழப்பம், மக்களெல்லாம் எழுந்து போனார்கள்” என்று பெரிய தலைப்புகளை கொடுத்துப் போடுவார்கள்.

இங்குள்ள பத்திரிகைகள் பன்றிகளுக்குத் தருகின்ற மதிப்பைக்கூட மக்களுக்குத் தருவதில்லை! மக்களை, பன்றிகளைவிட கேவலமாகவே நினைக்கின்றன.

நான் நாகர்கோயில் சுற்றுப்பிரயாணத்தில் இருக்கும் போது என்னை வந்து பத்திரிகை நிருபர்கள் அணுகினார்கள்.

என்னைப் பார்த்து “என்ன செய்தி” என்று கேட்டார்கள்! “யாருக்கு” என்று கேட்டேன்! “எங்களுக்குத்தான்” என்று சொன்னார்கள். “எதைப்பற்றி” என்று நான் அவர்களைக் கேட்டேன்! “உங்கள் கட்சியிலுள்ள நிலையைப்பற்றி” என்று சொன்னார்கள்! அதை உரியவர்களிடம் சொல்லி எங்கள் நிலையை பரிகாரம் செய்து கொள்கிறோம்—“நீங்கள் ஏதாவது மானமுள்ள நல்ல தொழிலாகப் பார்த்துக் கொள்ளுங்கள்” என்று கூறி அனுப்பிவிட்டேன்!

பத்திரிகைகளை மட்டும் நாம் குறைகூறி பயனில்லை! பத்திரிகைகள் நம்மைப் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றன என்பதையும் குறிப்பிட வேண்டும்! அதை வைத்துக்கொண்டு

—"நிச்சயமாக ஒரு குழப்பத்தை உண்டாக்க வேண்டும்" என்ற நிலைக்கு பத்திரிகையாளர்கள் வந்திருக்கின்றனர் என்றே கூறவேண்டும்!

ஐந்தாயிரம் விலையுள்ள வைரத் தோடானாலும் காதில் புண் என்றால் அதை அணிந்துகொள்ள முடியாது—கழட்டி தான் வைக்க வேண்டும்! புண் ஆறியவுடன் அந்த விலையுயர்ந்த வைரத் தோட்டை எடுத்து மாட்டிக் கொள்வார்கள் சம்பத் என்னை புண் என்று கருதினால்—வைரத்தின் மதிப்பு அவருக்குத் தெரியும்—அதைக் காப்பாற்ற விலகிச் செல்லுகிறேன் என்று விலகி இருக்கிறார்! புண் ஆறிவிட்டால் வைரத்தோடு காதுக்கு அணியாகிவிடும்!

இன்னும் ஒரு திங்களுக்கு பத்திரிகைகாரர்களுக்கு ஒரு பெரிய வேட்டையாகத்தான் இருக்கும்! "இன்று பத்து பேர் விலகினார்கள் இன்னும் பத்து பேர் விலகக் கூடும்" என்று செய்திகள் வரும்! "இன்னும் பத்து பேர்" என்பது விற்பனையின் ரகசியம்! மறுநாள்—"நேற்று குறிப்பிட்டபடி அந்த பத்து பேர்களும் இன்று விலகினார்கள்" என்று செய்திகள் வரும்!

அவர்களுக்குக் கொண்டாட்டம்!

அவர்களுக்குத் தீபாவளி; நமக்கோ அழுகை—கண்ணீர்!

இந்த கண்ணீர் அவர்களை சும்மா விடாது!

எங்குமே இல்லாத குறைபாடுகள் எங்களிடத்தில் மட்டும் அப்படி என்ன இருக்கின்றன? சில குறைபாடுகள் இருக்கலாம்! அதை நீக்க முடியாது என்பதல்ல! ஏன் நீக்க முடியவில்லை என்பதையும் உணரவேண்டும்!

அந்த குறைபாடுகளை நீக்க முடியவில்லை என்பதையும் உணர வேண்டும்!

அந்த குறைபாடுகளை நீக்க என்னை எங்கே விடுகிறீர்கள்? எனக்கு எங்கே அவகாசம் கொடுக்கிறீர்கள்! நாள் தவறாமல் இரண்டு கூட்டங்கள்! ஐந்தாம் தேதி கூட்டம், ஆறாம் தேதி ரயில், ஏழாம் தேதி காலையில் திருமணம்

மாலையில் தென்னேரியில் கூட்டம்—நல்ல மோட்டார் கிடைத்திருந்தால் அன்றைய நூல் வரலாற்று வெளியீட்டுக் கூட்டத்திற்கு வந்திருக்க முடியும்! எப்படி குறைகளைக் களைய முடியும்! குறைகளை களைவதற்கு அவகாசம் எங்கே கிடைக்கிறது?

ஏணையிலே முதல் குழந்தை சத்தம் போட்டுக்கொண்டிருக்க, இடுப்பிலே இரண்டாவது குழந்தை, முந்தாணையை பிடித்துக் கொண்டு மூன்ருவது குழந்தை, வயிற்றிலே ஆறு மாதம் என்ருல் வேகாத சாதம்தான் கிடைக்கும்! இது தாய் மார்மீது குற்றமல்ல—24 மணி நேரமும் உழைத்தால் சலிப்புத்தானே வரும்!

அப்படிப்பட்ட சலிப்புணர்ச்சி எனக்கு வராமலில்லை! எனக்கு எத்தனையோ தரம் சலிப்புணர்ச்சி ஏற்படத்தான் செய்தன!

உங்களை எண்ணியே, உங்கள் ஆர்வத்தை, அடங்காத ஆசையை நினைத்தே என் சலிப்புணர்ச்சியை அடக்கிக் கொண்டேன்!

எங்களை நம்பி இலட்சம் இலட்சமாகக் கிடக்கும் உங்களை எப்படி ஏமாற்றுவது?

"திராவிட நாட்டைப் பிரித்தே தீருவோம்" என்று நாங்கள் கூறிய நேரத்தில் நீங்கள் எத்தனைபேர் கையொலியை எழுப்பி உங்கள் ஆர்வத்தைக் காட்டிக் கொண்டிருப்பீர்கள்!

திராவிடத்தின் விடுதலைப் பணியைக் கேட்டு உங்களில் எத்தனை பேர் ஆர்வத்தோடு வாழ்த்தொலியை, இதய ஒலியாக்கி முகம் மலர்ந்திருப்பீர்கள்!

இதையெல்லாம் எண்ணிதான், உங்கள் அன்பு முகத்தைப் பார்த்துதான், உங்கள் ஆர்வ ஒலியைக் கேட்டுதான் என் சலிப்பு உணர்ச்சியை அடக்கிக் கொண்டு பணி புரிகிறேன்!

போதுமான அவகாசம் கிடைத்தால் உள்ள குறைபாடுகள் அனைத்தையும் களைந்தெறிய முடியும்! எங்கே அவகாசம் கிடைக்கிறது!

தலைவாரி பூச்சூட்டிக் கொள்ள ஆசைதான்! ஆனால் தலையை சீவிக் கொள்ள சீப்பை எடுத்தாலோ பல் உடைந்து இருக்கிறது—கண்ணாடி முன் போய் நின்றாலோ அதன் ரசம் போயிருக்கிறது—கணவனோ தெருவில் நின்று கொண்டு—"காமாட்சி வா" என்று பல்லைக் கடித்துக் கொண்டு கூப்பிடுகிறான்! அவள் வரத்தானே வேண்டும்!

கழகத்திலுள்ள சில பழக்கத்தை திருத்த காலம் வேண்டும்!

வேலூரில் ஏற்பட்டுள்ள சில கசப்புணர்ச்சியை களைந்தெறிய அவகாசம் வேண்டும் என்றுதான் கூறுகிறேன்!

சாதாரண வயிற்று வலியாக இருந்தால் சோடா குடித்தால் போய்விடும்! அஜீர்ணமாக இருந்தால் ஜிஞ்சர்பீர் சாப்பிடலாம்! வயிற்று நோயாக இருந்தால் அதற்கேற்ற முறையில் சிகிச்சை செய்ய வேண்டும்! கழகத்திலுள்ள குறைபாடுகளை போக்க அவகாசம் வேண்டுமென்கிறோம்! போக்கவே கூடாது என்று யாரும் கூறவில்லை, கூறமாட்டார்கள்!

"கழகத்தில் குறைபாடுகள் இருக்கிறது" என்று சம்பத் கூறினால்—"காங்கிரசை ஏற்றுக் கொண்டார்" என்று பொருள் அல்ல! காங்கிரஸ் கட்சியின் சாக்கடை நாற்றத்தை எப்படித் தாங்கிக் கொள்ள முடியும்!

எங்கள் சில்லறைத் தகராறுகளால்—இந்திய சர்க்காரின் கொடுமைகளை எப்படி ஏற்றுக் கொள்ள முடியும்?

திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து, சம்பத் விலகிவிட்டார் என்றால் காங்கிரசை ஆதரிப்பதாகக் கொள்ள முடியுமா? முதலாளிகளுக்கு முட்டுக் கொடுப்பவர் என்றுதான் கூற முடியுமா?

சம்பத் உங்களை ஆதரிப்பதற்காக இங்கிருந்து விலகவில்லை! எனக்கு வேதனையை ஏற்படுத்தி, இன்னும்—கழகத்திலே விறுவிறுப்பை ஏற்படுத்தத்தான் அவர் விலகி இருக்கிறார் என்று எண்ணுகிறேன்!

"திராவிட முன்னேற்றக் கழகத்தில் பிளவு இல்லை—எதிரிகள் விஷமத்தனம் செய்கிறார்கள்" என்று கூறினர்! உண்மையில் இங்கு என்ன பிளவு இருக்கிறது? எதற்காகப் பிளவு இருக்கிறது?

நான் வாதத்திற்காகச் சொல்லுகிறேன்—ஆமாம்! இங்கே பிளவுதான்! நீ என்ன வாழ்கிறாய்! அதை முதலில் சொல்!

நான் "வாதத்திற்காக" என்று குறிப்பிட்டதை மறந்துவிட வேண்டாம்! இதனால் பிளவு இருப்பதாகவும் எவரும் எண்ணிவிட வேண்டாம்!

இங்கு பிளவு என்று வாதத்திற்காக ஒப்புக்கொண்டால்—அங்கு மட்டும் பிளவு இல்லையா?

ஒரிசாவில், நீ என்ன வாழ்கிறாய்? பீகாரில் உன் யோக்கியதை என்ன? பஞ்சாப் மாநிலத்தில் ஏன் சந்தி சிரிக்கிறது? உன்னைப்பற்றி ஊராருக்குத் தெரியவே தெரியாதா? இதுவரை உன்னைப்பற்றி நாங்கள் கவலைப்படவில்லை, நாங்கள் கவலைப்பட ஆரம்பித்தால்—உன்னிடமுள்ள அத்தனை ஊழல்களும் அம்பலமாகி விடும் என்பதை நீ, அறிந்து கொள்ளவேண்டும்!

இங்குள்ள பூசலால், தேர்தலில் 4 ஒட்டுகளைப் பெற்று விடலாம் என்று எண்ணினால் நீ நிச்சயமாக ஏமாந்து போகத்தான் வேண்டும்! இங்குள்ள குறைபாடுகள்—உங்களிடத்தில் உள்ள பூசல் அல்ல! இதை நீ முதலில் தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண்டும்!

திராவிடநாடு கொள்கையை விட்டுவிட வேண்டும் என்று இங்கு யாரும் கூறவில்லை! தமிழ் மொழியின் மீதுள்ள பாசமும் இங்கு யாருக்கும் போய்விடவில்லை! போன வாரத்தில்தான் சம்பத் இந்தியை எதிர்த்து, தமிழ் மொழியில், பாராளுமன்றத்தில் பேசினர்! எனவே அவரை இந்திப் பள்ளிக்கு அழைத்துச் சென்று விடலாம் என்று மட்டும் நினைக்கவேண்டாம்!

உங்கள் கையில்தான் எல்லாம் இருப்பதாக எண்ணி விடவும் வேண்டாம்! எங்கள் பஞ்ச புத்தியால் வேண்டு மானல் உங்களுக்கு வோட்டு கிடைக்கலாமே தவிர, வேறு ஏதாலும் எங்களை வீழ்த்தி விடலாம் என்று எண்ண வேண் டாம்!

எங்களிடத்திலுள்ள எந்த குறைபாடுகளில், எது நின் றது? முனுசாமியை மேயராகாமல் தடுத்ததா? அல்லது நண்பர் அ. பொ. அரசுவைத்தான் தடுத்ததா?

நம்மில் முக்கியமான நேரத்தில் எதை விட்டு விட் டோம்? எதை செய்யத் தவறவிட்டோம். சட்டி ஓட்டை என்றாலும் கொழுக்கட்டை வேகாமலா போய் விடுகிறது! "சட்டி ஓட்டை, சட்டி ஓட்டை" என்று கூறினல் மட்டும் போதுமா? வேறு சட்டி கிடைக்கிற வரையில் இந்த சட்டி யில்தான் கொழுக்கட்டையை வேக வைக்க வேண்டும்!

குழப்பம் நிலவி வந்த நேரத்தில் எனக்கு வந்துள்ள ஆயிரக்கணக்கான கடிதங்களைப் பார்த்துக் கொண்டிருக்கிற நேரத்தில்—டென்மார்க் தேசத்திலுள்ள ஒரு பொருளாதார நிபுணர் நம்முடைய இயக்கத்தைப் பற்றி அறிந்து கொள்ள எழுதப்பட்ட ஒரு கடிதத்தையும் கண்டேன்!

அமெரிக்கா நாட்டு பல்கலைக் கழகத்தைச் சார்ந்த ஒரு பேராசிரியர், நமது நெடுஞ்செழியனுடைய அண்ணன்—பட்டுக் கோட்டையிலிருக்கும் சௌரி ராஜனுக்கு கடித மெழுதி நமது இயக்கத்தைப்பற்றி அறிந்து கொள்ள ஆசைப்பட்டார்! இப்படி பாரெல்லாம் நம்முடைய இயக்கத் தின் புகழ் பரவி இருக்கக் காரணம் என்ன? கடல் கடந்த நாடுகளிலெல்லாம் நம்மைப் பற்றியே எண்ணிக் கொண்டிருக் கிருர்கள்!

திரு. மதியழகன், நாம், பனிரெண்டு ஆண்டுகளாக பட்ட கஷ்ட நஷ்டங்களைப்பற்றி, செய்த தியாகங்களைப் பற்றி பேசினர்! இதைவிட பெருமை நமக்கு வேறு என்ன வேண்டும்!

சம்பத் அவர்கள் இந்த கூட்டத்திற்கு வராத நிலை ஏற்பட்டதைக் கண்டு மெத்த மன வேதனையடைகிறேன்! அந்தப் பழியை நாம் தாங்கிக் கொள்ளத்தான் வேண்டும்! அதே நேரத்தில் நம்மிடத்தில் பொறுப்புணர்ச்சியும், கட்டுப்பாடும் வளர வேண்டும்!

"இந்த நிலை உருவாவதற்கு—நம்முடைய வரலாற்று நூல் வெளியீட்டு விழா" காரணமாக இருந்தது குறித்தும் வேதனையடைகிறேன்! அவரே இதை எதிர்ப்பார்த்திருக்க மாட்டார் என்றே நினைக்கிறேன்!

நண்பர் பார்த்தசாரதி மெத்த வருத்தத்தோடு இதைப் பற்றி இங்கு குறிப்பிட்டதைக் கேட்டீர்கள்! அவர் அமைத்த ஒரு நிகழ்ச்சி இதற்குக் காரணமா யிருந்ததைப் பற்றி நான் வருத்தப்படாமல் இருக்கமுடியாது!

நம்முடைய இயக்கம் துவக்கப்பட்ட நேரத்தில் மாலைமணி நாளிதழை நமக்குத் தந்து பேருதவி செய்ததை நம்மால் எப்படி மறக்க முடியும்?

நண்பர் பார்த்தசாரதி என்னைப் பார்த்து—"அண்ணா என்மீது ஏதாவது கோபம் உண்டா?" என்று கேட்டார்! எனக்குப் பிடிக்காத கருத்து இதுதான்! யார் மீது எனக்கு என்ன கோபம்? பட்ட கஷ்டத்தை நான் ஒருநாளும் மறந்து விடமாட்டேன். அந்த பண்பு எனக்கு எப்போதுமே கிடையாது! அது உங்களாலும் முடியாது என்பதை நானும் அறிவேன்!

தி. மு. க. வரலாற்று ஏட்டிற்கு என்னிடம் முன்னுரை கேட்டார்! நான் அந்த நேரத்தில் கூட வேண்டுமானால் என் பெயரில் நீங்களே எழுதி போட்டுக் கொள்ளுங்கள்" என்று கூட கூறினேன். பிறகு நானே அவருக்கு முன்னுரையும் எழுதியும் தந்தேன்!

எனவே எனக்கு யார்மீதும், எப்போதும் கோபம் என்பதே கிடையாது! உங்கள் மீது கோபப்படுவதால் எனக்கென்ன பலன் கிடைத்துவிடப் போகிறது? உங்களைப்

பழிப்பதால், உங்கள் மீது மாசு ஏற்படுத்துவதால் எனக்கென்ன மதிப்பு வந்துவிடப்போகிறது? தயவு செய்து என்னை அப்படிக் கருதவே கருதாதீர்கள்!

என் கைகளை கோபித்துக் கொண்டு நான் என்ன செய்ய முடியும்? என் இதயமும், நெஞ்சமும், என் உயிர்த் துடிப்பும் நீங்கள் தானே? உங்களை வெறுப்பது என்னையே நான் வெறுத்துக் கொள்வதாகும்! இன்று மட்டுமல்ல, என்றுமே யாரையுமே தரக் குறைவாக எண்ணியதே கிடையாது. எனக்குப் பிடிக்காத பொருள் ஒன்று இருக்கிறது என்றால் அது இதுதான்!

நான், எப்போதுமே ஆணையிட்டு பழக்கப்பட்டவனல்ல. கட்டளையிடும் பண்பைப் பெற்றவனுமல்ல! பெரியாரே இதை ஒப்புக்கொள்வார்கள்!

நான் சில பல நேரங்களில் சிலர் மீது வருத்தப்படுகிறேன் என்றால்—அது அவர்கள் மீதுள்ள உண்மை அன்பால் உண்மையான பாசத்தால் என்பதை நீங்கள் உணர்வீர்கள்! சின்ன ஆஸ்டின் மோட்டார் காரிலே அறுபது மைல் வேகத்தில் போக எப்படி முடியும்? கூட்டுத் தோழர்களின் பெரும் பணியால்தான் நல்ல பணியை, நல்ல முறையில் செயலாக்க முடியும்! இந்தப் பணியை செம்மையாக சிறப்போடு செய்ய விலகிச் சென்ற நண்பர்களை திரும்பவும் அழைக்கிறேன்! மறுபடியும் உங்கள் கருத்தினை மறு பரிசீலனை செய்து பாருங்கள் என்றும் கூறுகிறேன்!

என், அன்பான இந்த அழைப்பிற்கு ஒரு அரசியல் பொருள் கற்பித்து என்னை பிரிக்க முயலாதீர்கள்!

இந்த இதயத்தை நீங்கள் எங்கு என்றாலும் பெற முடியாது! இந்த இதயம் தான் விசாலமான இடம், இந்த இதயம் தான் இளகிய இதயம்!

உங்களுக்கும் இந்த இதயம் கிடைக்காது, என் இதயத்திற்கும் உங்களை விட வேறு யாரும் கிடைக்கமாட்டார்கள்!

எனவே பிரிந்து சென்றவர்கள் மறுபடியும் ஓர் நல்ல முடிவிற்கு வரவேண்டும் !

நம்மிடையே ஏற்பட்டுள்ள இந்த குழப்ப நிலையை வைத்துக் கொண்டு, காங்கிரஸ்காரர்கள் நாளை முதல் கயிறு திரிக்கும் வேலையில் இறங்கக் கூடும் !

காங்கிரஸ்காரர்கள் திட்டமிட்டு நம்மிடம் பிளவை உண்டாக்கவே முயற்சித்து வருவார்கள் ! அதற்கு நாம் பலியாகி விடக் கூடாது !

சம்பத் பிரிந்து சென்றதை நாம் சாதாரணமாக நினைக்க முடியாது. இங்கிருந்து யார் பிரிந்து சென்ருலும் அதை சாதாரண விஷயமென்று கூற முடியாது !

நம்மில் யாரும் சாதாரணமானவர்கள் கிடையாது ! நம்மில் ஒருவரை இழந்தாலும் ஒரு காலை இழந்து விட்டவர்களாகவே கருதுவோம். ஒரு கண்ணை இழந்து விட்டவர்களாகவே கருதுவோம் !

இன்று ஒரு காலை இழந்து தடியூன்றி நடப்பவர்களாகி விட்டோம். கண்ணை இழந்து தடுமாறும் நிலையைப் பெற்றுவிட்ட தாகவே கருதுகிறேன் !

சம்பத் அவர்கள் பொறுப்புள்ள பதவியை வகித்து வந்தவர்—சம்பத்தை இதுவரை நான் "அவன், அவன்" என்று கூப்பிட்டுதான் பழக்கப்பட்டவன் ! சம்பத்தை இந்த நேரத்தில் "அவன், அவன்" என்று சொன்னல்-"எப்படி எங்கள் சம்பத்தை அவன், இவன்' என்று சொல்லலாம்" என்று சிலர் சொல்லக்கூடும்! அதனல் சம்பத்துக்கு இருக்கிற பெருமை போய் விட்டதாகவும் எண்ணக்கூடும். பழக்கமில்லாத காரணத்தால் சம்பத்தை 'அவர் அவர்' என்று சொல்லும்போது என் நா குழறுகிறது!

சம்பத்தை சின்ன பிள்ளையிலிருந்தே நான் பார்த்திருக்கிறேன்—இப்போது அவரை பார்த்திருக்கிறேன். சின்ன பிள்ளையில் பார்த்த அந்த சம்பத்துதான் பாராளுமன்றத்தில் வல்லப பந்துவின் முன்னிலையில் அமர்ந்து இந்தியை

எதிர்த்து முழக்கமிட்ட சம்பத்தாகும்! இந்த காட்சியை கண்டு மெத்தவும் பூரித்தவன் நான்!

நான் மெத்தவும் துர் அதிர்ஷ்டக்காரன்! முன்பு என் தந்தையைப் பிரிந்தேன், இன்றோ என் தம்பி பிரிந்து போவதாகச் சொல்லுகிறார்! என் தம்பி சம்பத்து அப்படி பிரிந்து செல்லக் கூடுமானால்-அவர் திரும்பி வரத்தக்க நிலையை நீங்களெல்லாம் ஏற்படுத்த வேண்டும்.

இந்த நேரத்தில்தான் நீங்களெல்லாம் மிக்க பொறுப் புணர்ச்சியோடு நடந்துகொள்ள வேண்டும். "பிரிந்து போவதுதான் நல்லது, பிரிந்துவிட்டால் என்ன நஷ்டம்" என்றெல்லாம் பதட்டத்தை வரவழைத்துக் கொண்டு பொறுப்பையும் மறந்துவிட்டு பேசலாகாது.

அழகான மங்கைக்கு அம்மை நோய் ஏற்பட்டு மறைந் தால்—அந்த அழகு தவழும் முகத்தில் அந்த வடுக்கள் இருக் கத்தான் செய்யும்! வடுக்கள் இருப்பதால் அழகு குறைய லாம்—அதனால் அந்த மங்கையின் மாண்பு ஒரு நாளும் கெட்டுவிடாது. திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் இன்று அந்த வடுக்கள் ஏற்பட்டுவிட்டது என்றே எண்ணுகிறேன்.

" ஒரு கட்சியில் இவ்வளவு பரபரப்பும் நடந்துவிட்ட பிறகு அந்தக் கட்சியில் வன்முறை செயல்கள், கசப்பு உணர்ச்சிகள் ஏற்படாலாமா போய்விடும்?" என்று இவை களெல்லாம் ஏற்பட வேண்டும் என்று விரும்புகிறவர்கள் நினைக்கக்கூடும்! அப்படிப்பட்ட நிலையில் நாங்கள் எப் போதுமே வளர்ந்ததில்லை!

இரண்டுபேர் ஒன்றாகப் படுத்தால் காலையிலே எழுந் திருக்கும்போது ஒருவர் பிணமாகவும், ஒருவர் உயிரோடும் இருக்கிற நிலை காங்கிரஸிலே வேண்டுமானால் இருக்கலாம்— அந்த நிலை இங்கு ஒருநாளும் ஏற்படாது.

காங்கிரஸ் கட்சியில் பூசலும் பிளவும் மலிந்து ஊரே நாற்றமடிக்கிற நிலையிலும் அவர்களைப்பற்றி யாரும்க வலைப் படுவதில்லை—நம்மைப்பற்றிதான் அதிகமாகக் கவலைப்படு

கிறார்கள்! இதற்குக் காரணமென்ன? காங்கிரஸ் தீர்ந்து போன விஷயம்! குஷ்டம் வந்த பிறகு—அது கையில் இருந்தால் என்ன, கன்னத்தில் இருந்தால் என்ன! அது ஊருக்குத் தெரிந்த விஷயம்தானே? காங்கிரஸ் இன்று நடைபிணமாகிவிட்டது—அதைப்பற்றிக் கவலைப்படுவோரும் இல்லை. கவலைப்பட்டும் பயனில்லை!

இங்கு அமர்ந்திருக்கும் நம் அருமைத் தோழியர் அலமேலு அப்பாத்துரை அம்மையார் அவர்கள் கறுப்புச் சேலை கட்டிக் கொண்டு அமர்ந்திருக்கிறார்கள்! அவர்மேல் மையைத் தெளித்தால், அது கறுப்புச் சேலையில் தெரியாமல் போய் விடும்! இப்படிச் சொல்லுவதால் யாராவது அவர் மீது மையை தெளித்துவிடாதீர்கள்!

வெள்ளை சேலை கட்டி இருப்பவர்கள் மீது அதே மையைத் தெளித்தால் பளிச்சென்று தெரியும்! நாம் தூய்மையானவர்கள், துல்லியமானவர்கள்! எனவேதான் நாம் அவர்கள் கண்களுக்கு பளிச்சிட்டுத் தெரிகிறோம்! காங்கிரஸ்காரர்கள்—குடுகுடுப்பைக்காரனைப்போல் ஒட்டுபோட்ட சட்டையை அணிந்து கொண்டிருப்பவர்கள்! நாம் அணிந்திருப்பதோ துல்லியமான வெள்ளைச் சட்டை! நம்முடைய துணி இதயத் தறியில், நெஞ்சை இழையால் நெய்யப்பட்டது!

நாமெல்லாம் இதயத்தால், நெஞ்சத்தால் ஒன்றுபட்டவர்கள்! சிறு சிறு குறைபாடுகள் காணப்பட்டால் அவைகளை கூட்டு முயற்சியால் களைந்தெறிய வேண்டும்! நான் மட்டுமே அதைச் செய்யவேண்டும் என்பதல்ல! 68333

நான் இதே கடற்கரையில்தான் உங்களுக்குக் கூறினேன்—நான் பொதுவாகச் செயலாளர்—உங்களுக்கெல்லாம் பொதுவாக இருக்கிற செயலாளர் என்று! அப்படிப் பொறுப்பைப் பகிர்ந்து கொண்டு செயல் புரிந்தால் எனக்கு மெத்த சந்தோஷம் ஏற்படுமே தவிர ஏதும் மனக்குறை உண்டாகாது!

நானே எல்லா வேலைகளையும் செய்யவேண்டும் என்று எண்ண—நான் தாங்கும் சக்திக்கு மேல் என்மீது அதிக

சுமையை சுமத்தி—பின்னாலேயும் பட்டாஸ் கட்டுகளை கொளுத்திப் போட்டால் நான்தான் என்ன செய்ய முடியும்?

பத்திரிகைகாரர்களைப்பற்றி எனது நண்பர்கள் மிகவும் குறைபட்டுக் கொண்டார்கள். பத்திரிகைகாரர்களுடைய வேலை எனக்குத் தெரியாத வேலையல்ல! நானும் உங்கள் இனத்தைச் சார்ந்தவன்தான். இது எனக்கு ரொம்ப பழக்க மான வேலை.

அமெரிக்காவிலிருந்து வந்த ஒரு பத்திரியையாளர் என்னைப் பார்த்து—"உங்களுக்கு என்ன தொழில்" என்று கேட்டபோது "நான் ஒரு ஜர்னலிஸ்ட்" என்றுதான் கூறினேன். என்னை "ஒரு ஜர்னலிஸ்ட்" என்று கூறிக்கொள்ளத்தான் நான் விரும்புகிறேன். இந்த வித்தையை நான் காட்டாத காரணத்தால் நீங்கள் தப்பிப் பிழைத்தீர்கள்! நான் பல வேலை காரணமாக அதில் ஈடுபடவில்லை!—அப்படி ஈடுபட்டால் உங்களில் யாரும் வாழ முடியாது.

எனவே, நாம் பத்திரிகைகளை குறை கூறாது, நாமும் மிக்க பொறுப்புணர்ச்சியோடு நடந்து கொள்ள வேண்டும். அமைதியோடிருக்க வேண்டும், அடக்க உணர்ச்சியோடு இருக்க வேண்டும்! அகல கால் வைக்கவும் கூடாது.

சோடா குடிக்கின்ற நேரத்தில், யாராவது ஒருவர் வந்து-"என்ன சம்பத் போய்விட்டாராமே" என்று கேட்டால் - நாம் எதையோ நினைத்துக் கொண்டு – "ஆமாம், போய்விட்டார்" என்று கூறக்கூடும். அதனால் சிலர் "சோடா குடிக்கின்ற ஏப்பத்தால்" அப்படிக் கூறியதாகவும் சொல்லக் கூடும். நீங்கள் எந்த நிலைக்கும் இடந்தரலாகாது.

"நாம் ஒரு பெரும் சக்தியாக வளர்ந்திருக்கிறோம்" என்று மதியழகன் குறிப்பிட்டார். இந்த இயக்கம் பன்னிரண்டு ஆண்டு காலத்தில் ஒரு நல்ல விடுதலை இயக்கமாக மாறி பணிபுரிய ஆரம்பித்திருக்கிறது. இந்த நேரத்தில் நமது இயக்கம் உடைந்துவிட்டால் - இந்தத் தலைமுறையில் தமிழர்களுக்கு ஒரு விடுதலை இயக்கம் தோன்றவே தோன்றாது. இதை மனதில் எண்ணி அனைவரும் பணிபுரிய வேண்டும்.

இதனல் நமக்கு தேர்தலில் பாதகமேற்படும் என சிலர் நினைக்கக் கூடும். காங்கிரஸ்காரர்களும் இப்படி தப்புக் கணக்கு போடுகிருர்கள். நிச்சயமாக இதில் பாதகமேற் படாது. அப்படி பாதகமே ஏற்பட்டால்கூட அதைப்பற்றி நாங்கள் கவலைப்பட போவதில்லை. எங்கள் இயக்கம் தேர்த லுக்காகவே துவக்கப்பட்ட இயக்கமல்ல.

பந்தலில் படர்ந்திருக்கும் அவரைக் கொடியில் பல முறை அவரைக் காய்களைப் பறிக்கலாம், எத்தனை முறை வேண்டுமானலும் பறிக்கலாம்.

நாம் அவரைக் கொடி—காங்கிரஸ் அத்திமரம். அத்திக் காயை சாப்பிட்டால் துவர்க்கும். அத்திப் பழத்தைப் புட்டுப் பார்த்தால் அத்தனையும் புழுவாக இருக்கும்.

தி. மு. க. ஒரு பூசனிக் கொடி! காய்த்த காய்களின் பாரம் தாங்காமல் அது கொல்லை முழுதும் படர்ந்து கிடக்கிறது.

அத்திக்காய் எட்டாத உயரத்தில்தான் காய்த்துத் தொங்குகிறது. சின்ன காய்—மரமோ உயரம்.

பெரிய பூசனிக்காய்--மரத்தில் அல்ல—நிலத்தில் படர்ந்திருக்கும் கொடியில் காய்க்கின்றன.

இது நமது தோட்டத்து கொடி!

இதுதான் நம் குலக்கொடி!

குலக்கொடியை அறுத்தெறிந்து விட்டால்--இந்தத் தலைமுறையில் இதுபோன்ற ஒரு இயக்கத்தை உருவாக் கவே முடியாது.

நேற்று முன் தினம்—"எல்லோருக்கும் இந்திய உணர்வு ஏற்படவேண்டும்" என்று நேரு பேசியிருக்கிருர், அதற்காக அரும்பாடுபட்டு உழைக்க வேண்டும் என்றும் கூறியிருக்கிருர்.

தண்டபாணி தேசிகர் பாடியிருப்பது போல்--"நல்ல சமயம் இதை நழுவ விடாதீர்கள்" என்று உங்களை மிகத்

தாழ்மையோடு கேட்டுக் கொள்ளுகிறேன். நீங்கள் கடுமையாக உழைக்க வேண்டும்.

அடுக்கு குவளையில் பாலை எடுத்துக் கொண்டு போகும் போது, முகத்தில் ஏதாவது பூச்சிவந்து உட்கார்ந்தால் தாய்மார்கள் பொறுமையாகத்தான் இருப்பார்கள். பூச்சி உட்கார்ந்திருக்கும் அரிப்பை பொறுமையோடுதான் தாங்கிக் கொள்வார்கள். பொறுமையை இழந்து பூச்சியை தட்டினால் கையிலிருக்கிற பால் குவளை கீழே தவறி விழத்தான் செய்யும், அந்தத் தாய்மார்களின் பொறுமையை நீங்களும் கடைபிடியுங்கள்.

நீங்கள் நடக்கும் பூமியின் பொறுமையை கடைபிடியுங்கள்.

பூமியில்தான் நிற்கிறீர்கள்--அந்த நிற்கும் பூமியைத் தான் வெட்டுகிறீர்கள். வெட்டினால் அது ஏன் என்று கேட்பதில்லை,

என்னை காங்கிரஸ் தூற்றுவதையே தொழிலாகக் கொண்டிருக்கிறது.

என்னை--இப்போதல்ல -- இருபது வருடங்களுக்கு முன்பு பார்த்திருக்க வேண்டும். அப்போது சட்டைக்கு சரியாக பித்தான்களைக்கூட போடுவதில்லை. மேலாடையை கக்கத்தில் வைத்துக்கொண்டுதான் மேடையேறி காங்கிரஸ்காரர்களுக்கு பதிலளித்துக் கொண்டிருப்பேன். மேலாடையை கக்கத்தில் வைத்துக்கொண்டாலே இங்கு அதற்கு தனி பொருளுண்டு. நான் அப்படியும் சிலகாலம் நடமாடிக்கொண்டிருந்திருக்கிறேன்.

பூமியில் நின்றுகொண்டுதான் கிணறு வெட்டுகிறீர்கள்! என்னை தலைவனுக்கித்தான் தத்தளிக்க வைக்கிறீர்கள்

மண்ணைச் சுமந்த காரணத்தால் என் உடம்பெல்லாம் மண்ணாக இருக்கலாம்--.

நான் மண்ணாங்கட்டிதான்! மண்ணைத் தோண்டினால் வைரமும், தங்கமும் இருப்பதுபோல-- என் இதயத்தைத் திறந்தால் அங்கே அன்பும், பாசமும் இருக்கும்! என் உள்ளமோ அத்தனையும் தங்கம்! .

என்னிடம் நெருங்கிப் பழகியவர்கள் நீங்கள்--என் உள்ளத்தையும் அறிந்தவர்கள் நீங்கள்!

எனக்கு வேறு ஆளில்லை—இந்த இதயத்தில் வேறு எவருக்கும் இடமுமில்லை. நீங்களும்தான் இந்த உள்ளத்தை எங்கு பெறப் போகிறீர்கள்?

என்று கூறி, இந்த நேரத்தில் மிக்க பொறுப்போடு நடந்து கடமையை செய்திட வேண்டுமென கேட்டுக் கொண்டு உங்களிடமிருந்து விடைபெறுகிறேன்.

முற்றும்

68333

பெங்களூர் விற்பனையாளர் :

பாண்டியன் நூலகம்

40, தர்மராசா கோவில் தெரு,

பெங்களூர்-1.

விற்பனையாகிறது!

தி. மு. க. புதுமைப்பாடல்கள்	0—25
தி. மு. க. பாடல்கள்	0—25
மேடைப் பாடல்கள்	0—25
தி. மு. க. தேர்தல் பாடல்கள்	0—25
சாகத் தயார்	0—25
எம். ஜி. ஆர். வெற்றி	0—25
சந்தி சிரிக்கிறது	0—25
கணவனைக் காணோம்	0—60
பள்ளி ஆசிரியை படுகொலை	0—60
காத்திருப்பேன் உனக்காக!	0—60
திடீர்மைனரின் திருக்கூத்து	0—50
ஐயோ...நானா?	0—50
கொலையும் செய்வாள்!	0—50
சதிகாரக் கும்பல்	0—50
மங்களத்தின் மரண யாத்திரை	0—50
காதலை நம்பிய கன்னி	0—50
யார் என் காதலி?	0—50
அங்கே இருப்பதென்ன?	0—50

68333

விபரங்களுக்கு:

முத்துமணி பதிப்பகம்
7, பெத்துநாயக்கன் தெரு, சென்னை-1.

காவலர் கூட்டம் நடைபெற்றது 26-2-61-ல் தோழர் சம்பத்தும், மற்றவர்களும், 'கழகத்தைவிட்டு வெளியேறுகிறோம்' என்று அறிவித்தது 9-4-61 ல், இந்த 42 நாட்களிலா கழகம், திருத்தப் படமுடியாத அளவுக்குக் கெட்டுவிட்டது? நாடு நம்பும் என்று எதிர்பார்க்கலாமா? நமது நெஞ்சமே நம்பாதே!

காவலர் கூட்டம் முடிந்தது, 6-3-61 ல் டில்லி புறப்பட்டார்; ஏப்ரல் 2-ம் நாள் சென்னை வருகிறார்; 2-ந் தேதி மாயவரத்தில்; மறுநாள் விருத்தாசலம்; பிறகு கள்ளக்குறிச்சி; பிறகு சீர்காழி வட்டம்; 7-ந் தேதி திராவிட முன்னேற்றக் கழக வரலாற்று வெளியீட்டு விழா-9-ந் தேதி விலகல்!

இடையில் மூன்றே நாட்கள்! இந்த முடிவா?

பொதுக்குழுவில் இடம்பெற்றுள்ள இருநூற்றுக்கும் குறைவானவர்கள், தோழர் சம்பத்திடம் தொடர்பு கொள்ளாதவர்களா? நல்லது கெட்டது தெரியாதவர்களா? கண்ணை மூடிக்கொண்டு வாய்ப்பொத்திக் கிடக்கக்கூடியவர்களா? ஏன் அவர்களை மொத்தமாகவோ, தனித்தனியாகவோ, சிறுசிறு பிரிவாகவோ அழைத்து கழகம் இன்னின்ன விதமாக திருத்தி அமைக்கப்பட வேண்டும்; கொள்கைகள் இப்படி இப்படிப் புது வடிவம் பெறவேண்டும்; கழகத்தில் முக்கியமானவர்கள், இதைச் செய்யக்கூடாது, இப்படிச் செய்யவேண்டும்—என்று தமக்குத் தோன்றும் எண்ணங்களை, முறைகளை தோழர் சம்பத் எடுத்துக்கூறி, இசைவு பெறக்கூடாது?

அண்ணா அறிக்கை நம்நாடு
18—4—'61

மதுரம் பிரஸ், 222, தம்பு செட்டித் தெரு, சென்னை-1